# பொதுக்காலம் 28 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்த வாசகம் 25: 6-10,

பதிலுரைப்பாடல்: திபா: 23:1-6,

திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய

திருமுகத்திலிருந்து வாசகம் 4: 12-14, 19-20,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22: 1-14

## திருப்பலி முன்னுரை:

என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக் காலம் இருபத்தெட்டாம் ஞாயிறு. சாவை ஒழித்து, பசும்புல் வெளிமீது நம்மை இளைப்பாறச் செய்யும் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

ஆண்டவரின் அருள் நலமும் பேரன்பும் நம்மைப் புடைசூழ்ந்துவரும்: நாம் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ இறைவன் நமக்கென்று பலவற்றை தயாரித்து வைத்திருக்கின்றார். நாம் அச்சம் அகற்றி நம்பிக்கையோடு வாழ, என்றும் இறைவன் நமக்கு அருகிருந்து நம்மை வழிநடாத்துகின்றார். வலுவும், ஆற்றலும் அளித்து அவர் நம்மைப் பாதுகாக்கின்றார். இந்த உண்மைகளை இன்றைய இறைவார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. ஆகவே நாம் அனைவரும் ஆண்டவரை நம் ஆயனாக ஏற்று, அவரே நமக்கு வலுவூட்டுகின்றவர், எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுபவர் என்பதை ஆழமாக விசுவசித்து அவர் காட்டும் வழியைப் பின் தொடர வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. அன்போடு எம்மை ஆதரிக்கும் எம் இறைவா!**

எம் திருஅவையை இந்நாள் வரை எல்லாவித இக்கட்டுகள், இடையூறுகள், பிரச்சினைகள், கட்சி மனப்பான்மை இவற்றிலிருந்து விடுபட்டு உம் விண்ணக வாழ்வைச் சொந்தமாக்கிக் கொள்ளத் திருஅவையின் அனைத்து நல்மேய்ப்பர்களுக்கும் தூயஆவியின் கொடைகளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. விருந்தின் நாயகனே இயேசுவே,**

உலகம் தரமுடியாத இன்பங்களை, மகிழ்ச்சியை, நிறைவை நீர் ஒருவரே தருகிறீர் என்று நான் அறிவேன். இருப்பினும், உம்முடைய அன்பைச் சுவைப்பதற்கு எனக்கு நேரமில்லை. விருப்பமில்லை. உமது அழைப்பை நான் பொருட்படுத்துவதுமில்லை. அத்தகைய நேரங்களுக்காக நான் மனம் வருந்துகிறேன். இயேசுவே, உலகக் கடமைகளில் ஆழ்ந்துவிடாமல், உமது அழைப்பை ஏற்கும் அருளை எங்களுக்குத் தந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்துவிடும் தந்தையே!**

வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் துயரினை அகற்றி அவர்கள் மகிழ்சியோடும், உடல் நலத்தோடும், அமைதியோடும் விடுதலை பெற்று வாழ்ந்திடச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் தந்தையே!**

இன்று கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக் கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் எம் இளைஞர்கள் அனைவரும் உமது அழைப்பிற்கேற்ப பிரமாணிக்கமாய் வாழ்ந்து, தூய உள்ளத்தோடு உமக்குப் பணிபுரிய அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**6. அன்போடு எம்மை ஆதரிக்கும் எம் இறைவா!**

எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் வார்த்தையால் மட்டுமல்ல, செயலாலும் உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழவும், சிறப்பாக, ஏழைகள் மீது அக்கறை கொண்டு, அவர்களது நல்வாழ்வுக்காக உழைக்கவும் இவ்வாறு எங்கள் வாழ்வு பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமையவும் உமதருள் வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**7. ஆதரித்தாளும் எம் இறைவா,**

எம் இளையோர் அனைவரையும் பாகுபாடுயின்றித் திரு அவையில் பல்வேறு மேய்ப்புப் பணியில் ஈடுபடுத்தி, அதனால் அவர்களின் ஆன்மீக வாழ்வில் வளம் பெற்றுத் தங்கள் சொல்லாலும் செயலாலும் சான்றுப் பகரும் வாழ்வை வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.